திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, கூட்டுறவு சொஸைட்டியில் 100-க்கு 80 பங்கு சரிவர வேலை செய்யவில்லை. இது சம்பந்தப்பட்ட சொஸைட்டி வேலை செய்யாமல் இருக்கக் காரணம் என்ன—அந்தக் காலக் கெடுவரையில் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதிலே, அவர்கள் மீது கூறி இருக்கக்கூடிய குற்றச்சாட்டுகள், ரசீது பொறுத்தமாகக் கொடுக்கப்படவில்லை ; கௌண்டர்ஃபாயிலுக்கும் கொடுக்கப் பட்டதற்கும் சரிவரவில்லை. லோன் ரெக்கவரி அந்தப் புத்தகத்தில் லெட்ஜரில் குறிப்பிடப்படவில்லை ; சாதாரண வெள்ளைக் காகிதத் தில் ரசீது போட்டு கொடுத்தார் என்ற மூன்று குற்றசாட்டுகள் தான் என்னிடத்திலே இருக்கிறது. அதற்குப் பிறகு விசாரணை செய்து, பிறகு பொது உறுப்பினர்கள் கூட்டத்தைக் கூட்டி விசாரணை செய்து அதற்குப் பிறகுதான் புதிய நிர்வாக குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஒலகடத்துக்கு ஆரம்பச் சுகாதார நிலையம்

*78 வினா.—**திரு. ஏ. எம். ராஜா :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பவானி வட்டத்திலுள்ள, ஒலகடம் கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் (Primary health centre) வேண்டு மென்று பொதுமக்களிடமிருந்து கடந்த ஆண்டில் கோரிக்கை ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. எம். ராஜா : தலைவர் அவர்களே, ஒலகடம் கிராமத்தைச் சுற்றியுள்ள ஊர்களிலுள்ள மக்களுக்கு வைத்திய வசதி தேவையாக இருந்தால், 10 மைல்களுக்கு அப்பால் வர வேண்டியுள்ளது. ஆகவே, ஒலகடம் கிராமத்தில் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே இந்த பிளாக்கில் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் இருக்கிறது. இரண் டாவது பிரைமரி ஹெல்த் சென்டர் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை.

இராயப்பேட்டை மருத்துவ மனை

*79 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசாங்க இராயப்பேட்டை மருத்துவ மனையை விரிவு படுத்திக் கட்டடம் ஏதேனும் கட்டப்பட்டு வருகிறதா ?

1968 ஆகஸ்ட் 21]

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) ஆம். எலும்பு முறிவு மருத்துவம் கதிர் வீச்சு மருத்துவம் முதலிய பிணிகளுக்குக் கூடுதல் இடவசதி அமைப்பதற்காக ஆறேகால் லட்ச ரூபாய் செலவில் கட்டடம் கட்டப்படுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனையில் போதிய இட வசதியில்லாமல் வராந்தாவில் நோயாளிகள் படுக்க வைக்கப்பட்டிருக்கின்றனர். இந்த ஆஸ்பத்திரி விரிவுபடுத்தி கட்டப்படுமா ? ஆரம்பத்தில் இந்தக் கட்டடத்தை விரிவுபடுத்துவதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ? பின்னால் இது குறைக்கப்பட்டதா ? இப்பொழுது வேலை தொடர்ந்து நடத்தப்படுகிறதா ? விரிவு படுத்துவதற்கான முயற்சி எப்பொழுது முடியும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ரூ. 6¼ லட்சம் செலவில் த்ரீ-ஸ்டோரிட் பில்டிங் கட்டுவதற்கு முடிவு எடுக்கப்பட்டது. இந்த ஆண்டு கிட்டத்தட்ட ரூ. 3 லட்சம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ரூ. 4 லட்சம் செலவழிக்கப்படும்.

DR. H. V. HANDE : If I remember right, the original scheme was for Rs. 12-1/2 lakhs. Dr. P. V. Cherian was one of the members of the committee and they raised a fund of Rs. 1 lakh. Later on, the Government promised to give some more funds. Will the Minister be pleased to state what the fund criginally allotted was, what the orginal scheme was and whether there has been any reduction, when exactly the scheme is going to be completed and how many beds are going to be provided ? Will the Minister be pleased to give details about these things?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : I have no particulars at present. My Friend may put a separa te question.

மேலூருக்கு குடி நீர்த் திட்டம்

* 80 வினா—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு மருத்துவதுறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், மேலூருக்குக் குடி தண்ணீர் வழங்கும் திட்டத்தின்கீழ் பள்ளப்பட்டிக்கு அண்மையில் ஓடும் பாலாற்றிலிருந்தோ அல்லது திருப்புவனத்திற்கு அண்மையில் உள்ள வைகையிலிருந்தோ தண்ணீர் கொண்டுவரும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்பெறும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) வைகை ஆற்றிலிருந்தாவது அல்லது பெரியாறு வாய்க்காலிலிருந்தாவது மேலூர் பஞ்சாயத்துக்கு நீர் வழங்கும் திட்டத்திற்கான ஆய்வு வேலை நடந்து கொண்டிருக்கிறது.